# முரசொலி

பக்கங்கள் நான்கு விலை ரூபா 5.00

முரசு ௦6 ஒலி 101 பிரசோற்பத்தி மாசி 24 (07.03 1992) சனி

## பாராளுமன்றத்தை ஜனாதிபதி அவமதிக்கிறார்

பாடசாலை அபிவிருத்திச்சபை அமைக்கப்படுவது குறித்து ஜனாதிபதி பிரேமதாஸ பெப்ரவரி மாதம் 12ஆம் திகதி வர்த்தமானியில் அறிவித்துள்ளது. பாராளுமன்ற விதிமுறைகளுக்கு மாறானது என சுதந்திரக்கட்சி எம். பி ரிச்சர்ட் பத்திரன பாராளுமன்றத்தில் நேற்றுக் கூறினார். அவசரகால விதிமுறையைஜனாதிபதிசாதகமாகபாவித்துள்ளதுபாராளுமன்ற விதிமுறைகளை அவமதிப்பதாகும் என்றும் அவர்சொன்னார் அரசியலமைப்பு13 ஆவதுவிதிகளின்படி மாகாணசபை இதனை ஆராய்ந்து அங்கீகரித்திருக்கவேண்டும்- பாராளுமன்றத்திற்கு கொண்டு வரப்பட்டு மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குக்களால் நிறைவேற்றப்பட வேண்டும் என்றார்.


★ உலகிலே இங்கேயே இருபாலாருக்கும் ஏககாலத்தில் பயிற்சியும் நியமனமும்

# பொறுப்பான பதவியில் பெண்கள்


# தமிழீழ காவல்துறை சாதனை!

## மகளிர் தினத்தை யொட்டி பொறுப்பாளர் நடேசன் பிரத்தியேகப் பேட்டி

-ரஞ்சன்-



உலகிலேயே பிரிட்டனில் தான் முதன் முதலாக காவல்துறை (பொலிஸ்) என்ற அமைப்பு உருவாக்கப்பட்ட போதிலும் தமிழீழத்திலேயே தேசியத் தலைவர் வே. பிரபாகரன் தலைமையில் ஆண்களும், பெண்களும் ஒரே பயிற்சியை ஏககாலத்தில் பெற்று ஒன்றாகவே கடமைக்கு நியமிக்கப்பட்டு புதிய சாதனை ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது



தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன் சர்வதேச மகளிர்தினத்தை முன்னிட்டு இன்றும், நாளையும் நடத்தப்படும் தமிழீழ பெண்கள் தினக் கொண்டாட்டங்களை யொட்டி நேற்று முரசொலிக்கு வழங்கிய பிரத்தியேகபேட்டியொன்றில் இத்தகவலைத் தெரிவித்தார்.

### முதல் பெண் பொறுப்பதிகாரி

அதுமட்டுமன்றி பெண்மணியொருவர் காவல் பணிமனையொன்றுக்கு பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள பெருமையும் தமிழீழத்திற்கே கிடைத்துள்ளது

அதிக கிராமங்களை உள்ளடக்கிய கோப்பாய் பிரதேச காவல்பணிமனையின் பொறுப்பதிகாரியாக ஒரு பெண்மணியே நியமிக்கப்பட்டுள்ளார் என அவர் இவ்வேளை சுட்டிக்காட்டினார்.

### மற்றொரு உலக சாதனை

அத்துடன் உலகிலேயே ஒரு விடுதலைப்போராட்டம் நடந்து கொண்டிருக்கும் வேளை, விடுதலைக்காகப் போராடும் அந்த மக்களின் நலனைக் காப்பதற்காக காவல்துறை ஆரம்பிக்கப்

...04ஆம் பக்கம் பார்க்க

விடுதலைப்புலிகள் மகளிர் முன்னணி

## கிளிநொச்சியில் இன்று தமிழீழ பெண்கள் மாநாடு

விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியினர் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் இன்றும் நாளையும் தமிழீழப் பெண்கள் மாநாட்டை நடத்துகின்றனர்

இன்று ஆரம்பமாகும் நிகழ்ச்சிகளுக்கு விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி பொறுப்பாளர்செல்வி ஜெயா தலைமைவகிக்கிறார். தேசியக் கொடி ஏற்றல் வைபவத்து

—04 ஆம் பக்கம் பார்க்க

சர்வதேசசெஞ்சிலுவைச்சங்கம், அரசஅதிபர் ஆகியோருக்கு

## குடியிருப்புகள் மீது ஷெல் தாக்குதல் நிறுத்தக்கோரி மக்கள் மகஜர்

காரைநகர், மண்டைதீவு, பலாலி இராணுவ முகாம்களில் இருந்து குடியிருப்புப் பகுதிகளை நோக்கி நடத்தப்படும் கண்மூடித்தனமான ஷெல் தாக்குதலை நிறுத்துமாறு கோரி சராலி, வடடுக்கோட்டை, மூளாய் பகுதிகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மக்கள் ஒன்று சேர்ந்து மகஜர் ஒன்றை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், அரச அதிபர் ஆகியோரிடம் நேற்று ஒப்படைத்தனர்.

மகஜரை ஏற்றுக் கொண்ட சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரி. இதனை உடனடியாக நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை தாம் மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார். 25, 04.47

## மூன்று வேங்கைகளுக்கும் நேற்று மக்கள் அஞ்சலி

நேற்று முன்தினம் கட்டைக்காடுமுகாமிலிருந்து வெளியேறிய போது ஏற்பட்ட நேரடி மோதலில் 21 படைகளை அழித்து பெருமளவில் ஆயுதங்களையும் படையினரினது சடலங்களையும் மீட்பதற்கு போராடி வீரச்சாவை அணைத்துக் கொண்ட மூன்று வீரவேங்கைகளின் புகழுடம்புகள் நேற்றுக்காலை சாவகச்சேரியிலும் பிற்பகல் மானிப்பாய் சுதுமலை அம்மன்

—04ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை அகதிகளுக்கு 139 கோடி ரூபா செலவு

இலங்கை அகதிகளுக்காக கடந்த மூன்றாண்டு காலத்தில் மத்திய அரசு 139 கோடி ரூபாவை செலவு செய்துள்ளதாக இந்திய பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது,

தமிழ்நாட்டிலும், ஒரிசாவிலும் இலங்கைத் தமிழ் அகதிகள் தங்கவைக்கப்பட்டுள்ளதாகவும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

தமிழக பட்ஜட் குறித்து தி. மு. க

## ஆடம்பரத்துக்கு வரிவிலக்கு ஆகாரத்திற்கு வரிவிதிப்பு!

தமிழக அரசின் பட்ஜட் நேற்று தமிழக நிதியமைச்சர் இரா. நெடுஞ்செழியனால் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்தபட்ஜட்குறித்துகருத்து தெரிவித்த தி மு. க சட்டப் பேரவை உறுப்பினர் பரிதி இளம்வழுதி இந்த பட்ஜட்டில் ஆடம்பரபொருள்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது ஆகாரப் பொருள்களுக்கு வரி உயர்த்தப்பட்டிருக்கிறது என்றார்

494 கோடி ரூபா இந்த பட்ஜட்டின் துண்டு விழும் தொகையாகும்.

## ஸ்ரீநகரில் பத்திரிகையாளர்கள் ஆர்ப்பாட்டப் பேரணி

ஸ்ரீநகரில் ஜனநாயக சுதந்திரம கோரி பத்திரிகையாளர்கள் ஆர்ப்பாட்டம் செய்ததில் எண்பது பேர் கைதானார்கள். பொலிஸாரின் தடியடிப் பிரயோகத்தில் பலர் காயமடைந்தனர் ஒருவர் நிலை மிகவும் கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

வன்முறையைத் தூண்டும் விதத்திலும், தேசத்துரோகத்துக்குத் துணைபோகும் விதத்திலும் செய்திகள் பிரசுரிப்பதற்கும், கட்டுப்பாடு விதிக்கும் சட்டமூலம் ஜம்மு காஷ்மீர் தலைநகர் ஸ்ரீநகரில் நிறைவேற்றப்பட்டதை எதிர்த்தே செய்தித்துறை ஊழியர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்,

கைது செய்யப்பட்ட அனைவரும் பின்னர் விடுவிக்கப்பட்டனர், எனினும் இச்சட்டத்தை எதிர்த்து 50பத்திரிகையாளர்கள் உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளனர்.

இந்தச் சட்டம் இரு மாதங்களுக்கு மட்டுமே அமுலில் இருக்கும் என அரசு தெரிவித்துளளது குறிப்பிடத்தக்கது.

வெங்கட்ராமன் சொல்கிறார்

## 'அகதிகள் சொந்த விருப்புடனே இலங்கை திரும்புகின்றனர்'

"இலங்கை அகதிகள் தமது விருப்பப்படி தாயகம் திரும்புகின்றனர். இலங்கை அரசாங்கம் வாக்குறுதிகள் அளித்ததால் இவர்கள் தொடர்ந்து தாயகம் செல்கிறார்கள்."

இவ்வாறு இந்திய ஜனாதிபதி ஆர் வெங்கட்ராமன் பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்துகையில் கூறினார்

"இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையே உள்ள வரலாற்று ரீதியான பாரம்பரிய உறவை ஸ்திரப்படுத்தத் தீர்மானித்துள்ளோம்" என்றும் அவர் சொன்னார்.

## சீனத்தாங்கி உபயோகம்; முனசிங்க கூறுகிறார்...

தற்போது இராணுவத்தினர் பாவிக்கும் ரி. 85 ரக சீனத் தாங்கிகள் புலிகளை அதிர்ச்சிக்குள்ளாக்கி உள்ளன என்று லேர்ணல் சரத் முனசிங்க கூறியதாகக் கொழும்பு நாளிதழ் ஒன்று நேற்றுச் செய்தி வெளியிட்டது

இராணுவத்தினர் இத் தாங்கிகளைப் பயன்படுத்துவது குறித்துச் சீனாவிலும் இங்கும் பயிற்சிபெற்றுள்ளனர் என்றும் இச் செய்தி மேலும் கூறுகிறது.

நேற்றைய தொடர்ச்சி

# கடலில் கைது செய்யப்பட்டோர்

மீன்பிடிக்கச் சென்றபோது கடலில் வைத்து கைதாகி பலாலி இராணுவ முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ள 121 பேர்களின் மிகுதிப் பெயர் விவரம் வருமாறு.

| | |
|---|---|
| கந்தசாமி பிறேமதாஸ் | வல்வெட்டித்துறை |
| கந்தசாமி குலவீரசிங்கம் | பொலிகண்டி |
| விளப்பமில்லை | |
| பாக்கி சிந்தா | நாச்சிக்குடா |
| சந்திரலிங்கம் அருணாசலம் | விளக்கமில்லை |
| விளப்பமில்லை | |
| பலலோகசிங்கம் மனோகரன் | இளவாலை |
| இருஷாந்த அரியரட்ணம் | இளவாலை |
| இராசையா நேசராசா | இளவாலை |
| பிரான்சிஸ் செலிநிக்கிலாஸ் | இளவாலை |
| புரன்சிப்பிள்ளை இறிகேதேவர் | இளவாலை |
| ஆசீர்வாதம் மரியசீலன் | இளவாலை |
| இளையதம்பி யோகராஜா | அல்வாய் |
| செபஸ்தியான் ஏபன் | குருநகர் |
| சேவியர் ரஜினி | குருநகர் |
| மக்கி சிமன்ராஜன் | குருநகர் |
| செய்யது பாபு ராஜுதீன் | குருநகர் |
| அகமதீன் ஜீலியஸ் பாலா | குருநகர் |
| விளப்பமில்லை | |
| எறோனி பிரான்சிஸ் | முதலாம் குறுக்குத்தெரு |
| சிங்கராசா கொன்சிரன்ரைன் | குருநகர் |
| சிறிகேசி ஜோன்சன் | குருநகர் |
| விளப்பமில்லை | பருத்தித்துறை |
| மகாலிங்கம் லக்சுமி கண்ணா | வல்வெட்டித்துறை |
| கனகசுந்தரம் அழகன் | வல்வெட்டித்துறை |
| துரைசாமி சிவசோதி | வல்வெட்டித்துறை |
| சிங்காரவேல் சிவஞானசுந்தரம் | பருத்தித்துறை |
| கந்தசாமி கண்ணன் | மாதகல் |
| துரைபாண்டியன் ரவீந்திரன் | மதுரை |
| சிவசாமி சோதிநாதன் | இலுப்பைக்கடவை |
| வரதராஜா மகேந்திரராஜா | மூளாய் |
| நவரட்ணம் ஞானரட்ணம் | பொலிகண்டி மேற்கு |
| கதிரவேலு யோகேஸ்வரன் | தாளையடி |
| சௌந்தியன் ஜேசுராசா | மன்னார் |
| நடராஜா ராஜ்குமார் | விளக்கமில்லை |
| எட்வின் ரகு | மாவிலந்தை வடக்கு அல்வாய் |
| சிவலிங்கம் வசந்தகலாதன் | சக்கோட்டை, அல்வாய் |
| கிறிஸ்ரோபிள்ளை வோசெற்றர் | குருநகர் |
| தோமஸ் பிலிப் நோனிஸ் | 49 குருநகர் |
| மரியநாயகன் கட்டியம்பா | 39 குருநகர் |
| அகர்சாமி பாமன் | இராமேஸ்வரம், தமிழ்நாடு |
| இம்மானுவேல் செல்வம் சாயதாஸ தவராஜா | குருநகர் |
| தமேன்பிள்ளை குயிற்றன் அமரதாஸ | குருநகர் |
| ஜேமின் குயின்ரஸ | குருநகர் |
| கதிரவேலு இரவீந்திரன் | திருநெலவேலி வடக்கு |
| சுப்பிரமணியம் குசீந்திரன் | தெல்லிப்பனை |
| அருளானந்தசாமி இராமகிருஷ்ணன் | அல்வாய் |
| ஐயாத்துரை ஆனந்தராஜா | அல்வாய் |
| துரைசாமி சந்திரலிங்கம் | பருத்தித்துறை |
| அப்துல் ரகீம் ஜலால்தீன் | பல்லவராயன்கட்டு |
| விளப்பமிலலை | |
| தங்கராஜா ஜெயக்குமார் | மானிப்பாய் |
| முத்துக்குமார் உதயகுமார் | இராமேஸ்வரம் தமிழ் நாடு |
| வைத்திலிங்கம் | தமிழ் நாடு |
| சிவகுரு செல்வத்துரை | வல்வெட்டித்துறை |
| ஐயாசாமி செலத்துரை | மாங்குளம் |
| செலவதாசன் | இராமேஸ்வரம் தமிழ்நாடு |
| நெப்போலியன் குசையா | மாதகல |
| துரைசாமி புஷ்பராஜா | பருத்தித்துறை |
| கைத்தான்பிள்ளை சூசைப்பிள்ளை | மாதகல் |
| இராம சந்தசாமி தேவதாஸ் | தாளையடி |
| சுப்பிரமணியம் சிவபாலன் | தாளையடி |
| செலவமாணிக்கம் அப்புத்துரை | பருத்தித்துறை |
| பொன்னன் இராசதுரை | காரைநகர் |

(முற்றும்)

## வவுனியா உயர்கல்வி கல்லூரி பூர்வாங்க ஏற்பாடு பூர்த்தி

250 மில்லியன் ரூபாவுக்கும் மேற்பட்ட தொகை செலவில் வவுனியா பூந்தோட்டத்தில் அமையவுள்ள வவுனியா உயர்கல்விக் கல்லூரியின் அமைப்பு வேலைகளுக்கான பூர்வாங்க ஏற்பாடுகள் பூர்த்திபெற்றுள்ளதாக அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்கு முன்னோடியாக வவுனியா நகரிலிருந்து பூந்தோட்டம் செல்லும் வீதி அவசர அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் செப்பனிடப்பட்டுள்ளதாகவும் இதற்கென 8 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

## தாண்டிக்குளம் ஊடாக மீண்டும் போக்குவரத்து

தாண்டிக்குளம் ஊடாகப் போக்குவரத்து நேற்று முன்தினம் மீண்டும் ஆரம்பமானதெனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஒரு வார காலம் இப் போக்குவரத்துத் தடைப்பட்டிருந்தது.

ஊரடங்குச் சட்டத்தால் பயணத்தைத்தொடர முடியாமல் வட பகுதியிலும் ஓமந்தை முதலான பகுதிகளிலும் இருந்த சுமார் 1000 பேர் நேற்று முன்தினம் வவுனியா சென்றடைந்தனர் என்றும் இதேபோன்று வவுனியாவில் தங்கியிருந்தோரும் வடக்கு நோக்கிப் பயணத்தைத் தொடர்ந்தனர் என்றும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

### நால்வர் தெரிவு

யாழ் பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்பட்ட கல்வி பட்டப்படிப்பின் டிப்ளோமா கற்கை நெறிக்கு முல்லை மாவட்டத்திலிருந்து நால்வர் தெரிவாகியுள்ளனர். (22)

### 'ஐலண்ட்' நாளிதழ் தகவல்

# வட, கிழக்கிற்கு 16,000 ஸ்ரீலங்கா பொலிஸார் அனுப்பப்படவுள்ளனர்

வடக்கு, கிழக்கில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட 16,000 பொலிஸார் அனுப்பப்படவுள்ளதாக பொலிஸ்மா அதிபர் ஏர்னஸ்ட் பெரேரா கூறியதாக நேற்றைய 'ஐலண்ட்' இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

கெரில்லாத் தாக்குதலிலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ள இவர்களுக்கு விசேட இராணுவப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதாகவும் இவர்கள் இராணுவத்திற்குத் துணையாகச் செயற்படுவர் என்றும் இச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிகரெட்; இடத்துக்கிடம் மாறுபடும் விலைகள்

யாழ். குடாநாட்டில் சிகரெட்டின் விலை இடத்துக்கு இடம் மாறுபட்டுக் காணப்படுகிறது. இங்கு விற்பனை செய்யப்படுவதற்கு பிறிஸ்ரல் சிகரெட் ஒன்றின் விலை 2.60 சதமாகவும், கோல் லீவ் சிகரெட்டின் விலை 3 10 சதமாகவும் அதேபோல் மற்ற கோண் சிகரெட் ஒன்றின் விலை 3.10 சதமாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆயினும் கிராமப் புறங்களில் மாத்திரமன்றி நகர்ப் புறங்களிலும் கூட பிறிஸ்ரல் சிகரெட் ஒன்று 3 ரூபா முதல் 3.50 சதம் வரையிலும் விற்கப்படுகிறது. ஏனைய சிகரெட்டுகளும் 3 50 இல் இருந்து 4 ரூபா வரை அதிகரித்தே விற்கப்படுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

குடாநாட்டில் உள்ள வியாபாரிகள் தமது இஷ்டப்படி அபரிமிதமாக விலையைக் கூட்டி விற்பதற்கு பல்வேறு போலிக் காரணங்கள் கூறுவதாக கவலை தெரிவிக்கப்படுகின்றது. (16)

## பொருள் விநியோகம்

6 ஆவது தொடர் உணவு முத்திரையின் 10 ஆவது புள்ளிக்கு நேற்றிலிருந்து பல நோ. கூ. சங்கக் கிளைகளினூடாகப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

அதைவிட 'அ', 'உ' உலர் உணவு அட்டையின் 22 ஆம் கட்டத்துக்குரிய பொருள்களும் தற்போது விநியோகிக்கப்பட்டு வருகின்றன. (77)

## தென்மராட்சி மாணவர்க்கு கிரிக்கெற் செய்முறைப்பயிற்சி

தென்மராட்சிக் கல்விக் கோட்டம் கிரிக்கெற் விளையாட்டுப்பற்றிய அறிவை மாணவர் பெறும் வகையில் பாடசாலைகளுக்கிடையிலான 15, 19 வயதுப் பிரிவுகளுக்கான மென்பந்து கிரிக்கெற் போட்டி ஒன்றை நடத்தி வருகின்றது.

மட்டுவில் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்று வரும் இப் போட்டிகளை தென்மராட்சி பிரதிக்கல்விப் பணிப்பாளர் பொ சிவகுருநாதனின் பணிப்பின் பேரில் தென்மராட்சி திட்டமிடல் உதவிக்கல்விப் பணிப்பாளர் இ கணேசன் நெறிப்படுத்தி வருகின்றார்.

எதிர்வரும் 9 ஆம் திகதி இறுதிப் போட்டிகள் நடைபெறும். (29)

## புலிகளுடன் பேச்சு: தெரிவுக் குழு முடிவைப் பொறுத்தது -ரணில்

"விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்துவதா, இல்லையா என்பது பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் முடிவைப் பொறுத்தது"

இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கேள்வி ஒன்றிற்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார் என்று நேற்றுக் கொழும்புச் செய்திகள் கூறின

நாதஸ்வர மேதைகளான
இரு முதுபெருங் கலைஞர்கள்
மாவிட்டபுரம் எஸ். கே. இராசா
யாழ்ப்பாணம் பி. எஸ். ஆறுமுகம்பிள்ளை
ஆகியோருக்கு
பாராட்டு விழா

இடம் : இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் ஆலயக் கல்யாண மண்டபம்
காலம் : 1992 மார்ச் 7ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4-00 மணி
தலைவர் ; சங்கீத பூஷணம் பொன். சுந்தரலிங்கம் அவர்கள்
மங்கள விளக்கேற்றல்: இசைக் கலைஞர்கள்
மங்கள இசை : இணுவில் கே. ஆர். சுந்தரமூர்த்தி குழுவினர்
இறை வணக்கம் : சங்கீத பூஷணம் செல்வி. நாகம்மா கதிர்காமர்
தலைமையுரை : சங்கீத பூஷணம் பொன். சுந்தரலிங்கம் அவர்கள்
ஆசியுரை : 1. நல்லை ஞானசம்பந்தர் ஆதீன ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்
2. மாவை ஆதீன கர்த்தா மகாராஜ ஸ்ரீ து, சண்முகநாதக் குருக்கள்
3. கீரிமலை நகுலேஸ்வர ஆதீனகர்த்தா சிவஸ்ரீ கு நகுலேஸ்வரக் குருக்கள்
4. சிவஸ்ரீ த, மகாதேவக் குருக்கள்
5. இயலிசை வாரிதி பிரம்மஸ்ரீ நா. வீரமணிஐயர்
சிறப்புரை : சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்
திரு. இரா. சுந்தரலிங்கம் B A. அவர்கள் (வடமாநிலக் கல்விப் பணிப்பாளர்)

★ விழா நாயகர்களைக் கௌரவித்தல் ★

பாராட்டுரை : நவாலியூர் நா. சச்சிதானந்தன் அவர்கள்
கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்கள் (விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம்)
கலாசூரி நா. க. பத்மநாதன் அவர்கள்
இ. ஜெயராஜ் அவர்கள் (அமைப்பாளர், அகில இலங்கைக் கம்பன் கழகம்)
நன்றியுரை ; நாதஸ்வர வித்துவான் வி. கே. பஞ்சமூர்த்தி அவர்கள்

A 03021

# தபாற் திணைக்களப் பணிகள் மே முதல் பரவலாகின்றன!

தபாற் திணைக்களத்தின் பணிகள் எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி முதல் மாகாண ரீதியில் பரவலாக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதற்கமைய ஒவ்வொரு மாகாணத்திலும் தலா ஒரு உதவித் தபால் மா அதிபர் வீதம் ஒன்பது பேர் நியமிக்கப்படுவர்.

அவ்வப் பகுதித் தபாற் திணைக்களத்திற்கு இவர்கள் பொறுப்பாக இருப்பர்.

கொழும்பில் இதுவரை மேற்கொள்ளப்பட்டு வந்த பணிகள் இவர்களிடம் ஒப்படைக்கப்படும்.

ஒவ்வொரு மாகாணத்திலும் உள்ள தபாற் கந்தோர்கள், உப- தபாற் கந்தோர்கள், ஏஜென்ஸித் தபாலகங்கள் ஆகியவற்றின் முழு நிர்வாகமும் மாகாண உதவித் தபால் மா அதிபரினால் மேற்கொள்ளப்படும்.

## 169 மில்லியன் ரூபா; வட, கிழக்கில் 'மீட்கப்பட்ட' பகுதிகளுக்குத் தேவையாம்

வடக்கு, கிழக்கில் 'மீட்கப்பட்ட' பகுதிகளில் புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு 169. 45 மில்லியன் ரூபாவை அவ்வப் பகுதிகளில் உள்ள அரசாங்க அதிபர்கள் கோரியுள்ளனர் என்று புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் செயலாளர் கிறிஸ்ரி சில்வா நேற்று முன்தினம் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

மன்னார் அரசாங்க அதிபர் 53. 48 மில்லியன் ரூபாவையும், வவுனியா அரசாங்க அதிபர் 50. 97 மில்லியன் ரூபாவையும், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை அரசாங்க அதிபர்கள் தலா 15 மில்லியன் ரூபாவையும் கோரியுள்ளதோடு 'மீட்கப்பட்ட' யாழ். தீவுகளுக்கு 20 மில்லியன் ரூபா கோரப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்ததாகக் கொழும்புச் செய்திகள் நேற்றுக் கூறின.

## கெற்பலி புதிய பாடசாலையில் 3 தினங்களில் 600 மாணவர் அனுமதி

கெற்பலியில் கடந்த புதன் கிழமை புதிதாகத் திறந்து வைக்கப்பட்ட பாடசாலையில் அனுமதி பெறும் மாணவர்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

கடந்த மூன்று தினங்களில் மட்டும் அங்கு சுமார் 600 மாணவர்கள் அனுமதி பெற்றுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் தீவகப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள்,

தற்பொழுது இப் பாடசாலையில் 6 ஆசிரியர்கள் கடமைபுரிந்து வருகின்றார்கள். மாணவர் தொகை அதிகரித்து வருவதனால் மேலும் சில ஆசிரியர்களை இப் பாடசாலைக்கு இடமாற்ற சாவகச்சேரி கல்விக்கோட்டப் பணிப்பாளர் பொ. சிவகுருநாதன், யாழ் கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் ஆகியோர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அத்துடன் தொண்டர் ஆசிரியர்கள் சிலரின் சேவையைப் பெற யாழ் திட்டமிடற் பகுதி நடவடிக்கை எடுத்துள்ளது.

பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான பாடப்புத்தகங்களை வேலணைக் கல்விக்கோட்டம் வழங்கியுள்ளது. (29)

## இந்தியாவிலிருந்து வந்த 8000 வடபகுதி அகதிகள் வவுனியா வர ஏற்பாடு

இந்தியாவிலிருந்து திருகோணமலை ஊடாக வந்த வடபகுதியைச்சேர்ந்த சுமார் 8000 அகதிகளை வவுனியா வர இருப்பதாக எதிர்பார்க்கப்படுவதாக நேற்று கொழும்புச் செய்தி ஒன்று தெரிவித்தது.

இவர்களை வவுனியாவில் தங்க வைப்பதற்கு நலன்புரி நிலையங்கள் ஒழுங்கு செய்யப்படுகின்றன என்றும் இவர்கள் தத்தம் சொந்த ஊர்களுக்கு அனுப்பப்படுவதற்கு முன்னர் இந் நிலையங்களில் தங்க வைக்கப்படுவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## அமைதி வேண்டி பாதயாத்திரை நேற்று ஆரம்பம்

வட, கிழக்கு மாகாணத்தில் அமைதி நிலைவேண்டி யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையினர் நேற்றுப் பாதயாத்திரை ஒன்றை நல்லை ஆதீனத்தில் இருந்து ஆரம்பித்தனர்.

இந்தப் பாதயாத்திரை நல்லூர் கந்தசுவாமி கோவில், பிள்ளையார் கோவில், மனோன்மணி ஆலயம், சிவன் கோவில், வீரமாகாளி அம்மன் கோவில், கைலாசபிள்ளையார் கோவில், வைரவர் கோவில், கற்பகப்பிள்ளையார் கோவில், விஷ்ணு கோவில், ஸ்ரீ காமாட்சி அம்பாள் கோவில், முத்த விநாயகர் கோவில், ஞானவைரவர் கோவில், குளத்தடிப் பிள்ளையார் கோவில், வெய்யிலுகந்தபிள்ளையார் கோவில் ஆகியவற்றிற்கு பஜனை வழிபாட்டுடன் ஏராளமான சைவப் பெரியார்கள் இந்த யாத்திரையில் சென்றனர்.

இந்தப் பெரியார்கள் ஊர்வலமாக வந்தபோது சில இடங்களில் மக்கள் தமது இல்லங்களுக்கு முன்னால் பூரண கும்பம் வைத்து மலர்மாலை அணிவித்தனர்.

இப் பாதயாத்திரை தொடர்ந்து 18 ஆம் திகதி வரை நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (47)

## எஸ் கே.இராசா, பி.எஸ் ஆறுமுகம்பிள்ளை முதுபெருங் கலைஞர்களுக்கு இணுவிலில் இன்று பாராட்டுவிழா

நாதஸ்வர மேதைகளான மாவிட்டபுரம் எஸ்.கே. இராசா, யாழ்ப்பாணம் பி.எஸ் ஆறுமுகம்பிள்ளை ஆகியோருக்கு இன்று பிற்பகல் 4.00 மணிக்கு இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் ஆலயக் கல்யாண மண்டபத்தில் சங்கீதபூஷணம் பொன் சுந்தரலிங்கம் தலைமையில் பாராட்டு விழா நடைபெறவுள்ளது.

இசைக் கலைஞர்கள் மங்கள விளக்கேற்றுவர். இணுவில் கே ஆர். சுந்தரமூர்த்தி குழுவினரின் மங்கள இசையும் இடம்பெறும்.

சங்கீதபூஷணம் செல்வி நாகம்மா கதிர்காமர் இறை வணக்கம் பாடுவார்.

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், மாவை ஆதீன கர்த்தா மகாராஜஸ்ரீ து சண்முகநாதக் குருக்கள், கீரிமலை நகுலேஸ்வர ஆதீன கர்த்தா சிவஸ்ரீ கு நகுலேஸ்வரக்குருக்கள், சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள், இயலிசை வாரிதி பிரம்மஸ்ரீ நா வீரமணி ஐயர் ஆகியோர் ஆசியுரை நிகழ்த்துவர்.

சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் இரா.சுந்தரலிங்கம் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்துவர்,

விழா நாயகர்களைக் கௌரவிக்கும் நிகழ்ச்சியில் நவாலியூர் நா சச்சிதானந்தன், கவிஞர் புதுவை இரத்தினதுரை, கலாசூரி நாக. பத்மநாதன், அ ஜெயராஜ் ஆகியோரின் பாராட்டுரைகள் இடம்பெறும்.

நாதஸ்வர வித்துவான் வி.கே பஞ்சமூர்த்தி நன்றியுரை நிகழ்த்துவார்.

## சினிமாவில் மீண்டும் சிவாஜி இலட்சியத் தாடியையும் வழித்தார்

சினிமா உலகிற்கு முழுக்குப்போட்டு விட்டுத் தீவிர அரசியலில் ஈடுபட்டு வந்த நடிகர் திலகம் சிவாஜி கணேசன் மீண்டும் திரையுலகிற்கு பிரவேசித்துள்ளார்.

'சின்ன மருமகன்' என்ற படத்தில் பார்வை மங்கிய குடும்பத்தலைவனாகச் சிவாஜி கணேசன் நடித்துள்ளார்

மீண்டும் திரையுலகிற்கு வரப்போவதில்லை என ஒதுங்கி நின்ற நடிகர் திலகம் தனது பிடியைத் தளர்த்திக் கொண்டு மீண்டும் ஸ்ருடியோ பக்கம் காலெடுத்து வைத்துள்ளமை பல தயாரிப்பாளர்களுக்கு புது உத்வேகத்தைக் கொடுத்திருப்பதாகச் சென்னைத் தகவலொன்று தெரிவிக்கின்றது.

தமிழகத்திற்கு காவிரி நீர் கிடைக்கும்வரை தனது தாடியை வழிக்கப்போவதில்லை எனக் கூறிவந்த நடிகர் திலகம் சினிமாவுக்காகத் தனது தாடியையும் இப்போது வழித்து விட்டார். (22)

## 'உயிர்ப்புடன் எழுவோம் உரிமையை மீட்போம்'

பெண்ணினத்தின் ஆற்றல்களை வியப்புடன் உலகு நோக்குகின்ற யுகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். ஆனாலும் பெண்ணின் பிறப்புரிமையை முற்றுமுழுவதுமாக ஏற்றுக் கொள்ளும் நாகரிகத்தை இன்னும் உலகம் முழுவதும் அடைந்து விடவில்லை. உலகளாவிய ரீதியில் பெண்களின் நிலைப்பாடு இதுதான் இவ்வாறு தமிழீழ மகளிர் தினத்தை முன்னிட்டு விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ் அறிக்கையின் முழு விவரம் வருமாறு:

"இதேபோன்றுதான் தமிழீழப் பெண்களாகிய எமது வாழ்வின் நிலையும் உள்ளது. தமிழீழப் பெண்கள் என்பதால் எமது சொந்த நாட்டில் வாழும் உரிமையே மறுக்கப்படும் நிலைக்குள்ளாக்கப்பட்டிருக்கின்றோம். அதேவேளை எமது சமூகத்திலேயே எமது உணர்வுகள் அலட்சியப்படுத்தப்பட்டு அவமதிக்கப்படுகின்றன.

### அவல வாழ்வுக்கு முடிவு வேண்டாமா?

உணர்வுகளும் மிதிக்கப்பட்டு, உரிமைகளும் பறிக்கப்பட்டு உயிரற்ற சடலமாக மதிக்கப்படும் அவல வாழ்வுக்கு முடிவு கட்ட வேண்டாமா? பட்டினியை எம்மால் பழக்கப்படுத்திக் கொள்ள முடியும் ஆனால் பாலியல் வன்முறைக்குட்படுத்தி, எமது பெண்களைச் சித்திரவதை செய்து கொண்டிருக்கும் சிங்கள இராணுவத்தின் கீழ்த்தரமான நடவடிக்கைகளைச் சகித்துக் கொண்டிருக்க முடியாது. தடைக்கு மேற் தடைகள் போட்டு எமது தன்மானத்துக்குச் சவால் விட்டுக் கொண்டிருக்கும் இனவாத அரசின் கனவுகளுக்குத் தீனி போடும் விதத்தில் சோம்பியிருக்காமல் நாம் உயிர்ப்புடன் எழுந்து கொள்ள வேண்டும் பட்டினிச் சாவுகளும், அரச அழிப்புகளும் எம்மைப் பலப்படுத்த வேண்டுமேயன்றி தளர்ந்து போக விடக்கூடாது. பெண்ணுக்கு விடுதலை இல்லையென்றால் எம் மண்ணுக்கும் விடுதலை இல்லை என்பதில் தெளிவாக உள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து திரத்துடனும் தியாக உணர்வுடனும் போரிட்டுத் தமது ஆற்றலை, ஆளுமையை பெண்கள் புலப்படுத்தி பெண்மையின் உண்மையை, பெருவீரத்தைப் பறைசாற்றும் புரட்சிகரமான நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்பதை அனைத்துப் பெண்களும் புரிந்து கொள்ள வேண்டும்; தன்னம்பிக்கையுடன் எழுந்து கொள்ள வேண்டும்.

### பெண்கள் மீதான அநீதி

அரசின் ஆக்கிரமிப்புச் செயற்பாடுகளால் மட்டுமல்லாமல் எங்கள் சமூகத்தின் நடைமுறைகள், கைக்கொள்ளும் வழிமுறைகள் ஆகியவற்றாலும் நாம் அவல வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். கைம்பெண்களின் கவலைகளையும், கண்ணீரையும் அலட்சியப்படுத்தி, அவர்களை அலைக்கழிந்த வாழ்வு வாழ வைப்பதும், மனைவி இருக்கும்போதே கணவன் மறுமணம் செய்து, மனைவியை உடல் உள பாதிப்புகளுக்கு ஆளாக்குவதும், திருமணம் செய்து இன்னுமொரு வீட்டுக்குப் போகும் பெண்களுக்கு கல்விக்காகப் பணம் செலவழிப்பது வீணென்று அவர்களின் கல்வி வாய்ப்பையே பாழாக்குவதும், மதக் கோட்பாடுகளை வலியுறுத்தி பெண்களை நிமிரவே விடாமல் அறியாமை இருளுக்குள் அவர்களை அமிழ்த்தி வைப்பதும் என்று எமது சமூகத்தில் பெண்களுக்கு அநீதிகள் இன்னும் பலவாகும்.

### அவமதிப்பு

பிறந்த நேரத்திலிருந்தே சீதனத்துக்காகப் பொருளும், பணமும் சேர்க்க வேண்டுமென்பதால் பெண் குழந்தையே வேண்டாமென ஒதுக்கப்பட்டு, அவமதிக்கப்பட்டு வருகின்றோம் மதக் கோட்பாட்டு வலியுறுத்தலின் விளைவாக, 'அடங்கி ஒடுங்கி அடிமையாய் வாழ்வது எமது விதி' என்று ஊமையாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்,

### பெண்கள் கடமை

தமக்கெதிராக இழைக்கப்படும் அநீதிகளைச் சகித்துக் கொண்டு விதியே என்று வாழ்வது பெண்ணுக்கு வேண்டாம் என்பதனையும், அதற்கெதிராகக் கிளர்ந்தெழுந்து போராடி விடுதலையை வென்றெடுக்க வேண்டியது பெண்களின் கடமை என்பதனையும் வலியுறுத்துவதே இந்நாளாகும்,

### உறுதி பூணுவோம்

இந்த நாளில் தமிழீழப் பெண்களாகிய நாம் இனியும், இன்னமும் அறியாமைக்குள் முடங்கி எமது உரிமைகளை இழந்து கொண்டே இருக்கமாட்டோம் என்றும். எம் மீது சிங்கள அரசு மேற்கொள்ளும் அடக்குமுறை வடிவங்களை உடைத்தெறிவதற்கான போரில் மட்டுமல்லாது சமூகத்தின் ஒடுக்குமுறைத் தத்துவங்களைத் தகர்க்கும் போராட்டத்திலும் எம்மை முழுமையாக ஈடுபடுத்தி எமது விடுதலையை வென்றெடுப்போம் என உறுதி பூணுவோமாக

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

வெளியீடு: விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி

# செஞ்சிலுவைச்சங்க தேர்தல் இன்று முதல் நியமனப் பத்திரங்கள்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையின் புதிய உத்தியோகத்தர் தெரிவிற்கான தேர்தல் இம்மாதம் 29 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இத்தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் இன்று சனிக்கிழமை தொடக்கம் இம்மாதம் 21 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படவிருக்கின்றன.

இம் முறை இத்தேர்தலில் முக்கிய பதவிக்கு பல புதிய முகங்கள் போட்டியிடவிருப்பதும் இதற்கான பிரசார வேலைகள் தற்பொழுது சூடு பிடித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. 06

# பாடசாலை அபிவிருத்திசபை விரைவில் சட்டமாகும்

பாடசாலை அபிவிருத்திச் சபைகளின் செயற்பாட்டை துரிதப்படுத்துவதற்காகவே அவசரகாலச்சட்ட விதிமுறைகளின் கீழ் இப்பிரேரணை கொண்டு வரப்படுவதாக கல்விச் சேவைகள் அமைச்சர் பாராளுமன்றத்தில் கூறினார்.

ஒரு பாடசாலை அதிபர் இச் சபைக்குத் தலைவராக இருப்பார். ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர் இதன் உறுப்பினர்களாகப் பணி புரிவார்கள்.

சில உறுப்பினர்கள் இரகசிய வாக்கு மூலம் தெரிவு செய்யப்படுவார்கள். பெற்றோரே வாக்களிப்பார்கள்.

இதற்கான சட்டமூலம் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் சொன்னார்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## கேள்வி அறிவித்தல்

## தனியார் பாதுகாப்புச் சேவை

கிளிநொச்சி விவசாய பீடத்தில் பாதுகாப்புச் சேவையை மேற்கொள்வதற்கு சிவில் பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்துள்ள தனியார் பாதுகாப்பு முகவர் அமைப்புகளிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கோருகின்றது.

கேள்விப்படிவங்களை மீளளிக்கப்படாத வைப்பான ரூபா 250/- ஐயும் மீளளிக்கப்படும் வைப்பான ரூபா 2500/ ஐயும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளரிடம் செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டுக்களைச் சமர்ப்பித்து 1992-03-31-ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகக் கிளையின் உதவிப் பதிவாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

கேள்வியாளர் 24 மணித்தியாலமும் விவசாயபீடத்திலுள்ள 3 காவல் நிலையங்களையும் காவல் புரிவதற்கு பதவியினரை தொழிலில் அமர்த்த தயாராக இருத்தல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதிவாளருக்கு 1992-04 06ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கோ அல்லது அதற்கு முன்னரோ சென்றடையக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

எந்தவொரு கேள்வியையும் நிராகரிக்கும் உரிமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கேள்விச் சபைக்கு உண்டு.

பதிவாளர்

03020

பொறுப்பான...

பட்ட பெருமையும் எமக்கே கிடைக்கின்றது என இப் பேட்டியில் குறிப்பிட்ட திரு. நடேசன் யாழ்ப்பாணம், சாவகச்சேரி, சுன்னாகம் காவல்பணிமனைகளின் உதவிபொறுப்பாளர்களாக பெண்மணிகளே கடமையாற்றுவது, தமிழீழப் பெண்கள் பெருமை கொள்ளக்கூடிய ஒரு விடயமெனவும் தெரிவித்தார்.

தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன் தனது பிரத்தியேக பேட்டியில் தெரிவித்த மேலும்சில தகவல்கள் வருமாறு:-

### காவல்துறை முழுப்பங்களிப்பு

பெண் ஒடுக்கு முறைக்கு எதிராக தமிழீழ காவல் துறை தனது முழுப்பங்களிப்பையும் வழங்கிவருகிறது.

### ஏற்கனவே பலர் கைது

பெண்களை ஏமாற்றியது, பெண்களை அவமரியாதைப் படுத்தியது, பெண்களுடன் தகாத முறையில் நடக்க முற்பட்டது போன்ற பெண்களுக்கு எதிரான குற்றச் செயல்களில் ஈடுபட்ட பல ஆண்கள் ஏற்கனவே காவல் துறையினரால் கைதுசெய்யப் பட்டுள்ளனர்:

### தண்டனை புதுவிதமானது

இவர்களுக்கு தண்டனை வழங்குவதைவிட, அவர்கள் திருந்தி வாழக்கூடிய முறையிலான பயிற்சிகளையும், சந்தர்ப்பங்களையும் வழங்குவதையே காவல்துறை விரும்புகின்றது.

இத்தகைய குற்றச்சாட்டின் பேரில் கைதாகி குற்றம் நிருபிக்கப் பட்டவர்களுக்கும் குற்றத்தை ஏற்றுக்கொண்டோருக்கும் பெண்விடுதலையைப் பூரணமாக உணர்ந்து, அதனை ஏற்றுக்கொள்ளக் கூடியதான பயிற்சியினை நாம் தற்பொழுது வழங்கி வருகின்றோம்.

பெண்களுக்குள்ள உரிமைகள் பற்றி தேர்ந்தெடுக்கப் பட்ட போதனாசிரியர்கள் அவர்களுக்கு தற்பொழுது போதனை செய்து வருகிறார்கள் என திரு. நடேசன் தெரிவித்தார்.

### காவல்துறையும் கலந்து கொளளும்

தமிழீழ பெண்கள் தின நிகழ்ச்சிகளில் காவல் துறையின் பங்களிப்பு என்னவாக இருக்கும் எனக் கேட்டபோது, இன்றும் நாளையும் கிளிநொச்சியில் நடைபெறவுள்ள தமிழீழப் பெண்கள் மாநாட்டில் காவல்துறையின் பெண் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டு கருத்துரை வழங்குவர் என திரு. நடேசன் பதிலளித்தார்.

★ விமானத்தில் குண்டுகளை பொருத்திய போது

# பர்மிய விமானப்படை தளத்தில் வெடிகுண்டு விபத்து!

பர்மா தலைநகர் ரங்கூனுக்கு வடக்கே பர்மா விமானப்படைதளம் ஒன்றில் ஏற்பட்ட வெடிகுண்டு விபத்தில் இரு விமானங்கள் சிதறின. 7 விமான படை ஊழியர்களும் பலியாகினர்.

சீனாவில் உற்பத்தி செய்யப்பட்ட டி-சி-6 ரகவிமானம் ஒன்றில குண்டுகள் ஏற்றப்பட்டுக் கொண்டிருக்கையிலேயே இச்சம்பவம் நடைபெற்றது.

பர்மாவுக்கு எதிராக போராட்டம் நடத்தி வரும் கரேன் கொரிலலாக்கள் மீதான விமானக் குண்டுவீச்சு நடத்தவே இந்தக் குண்டுகள் விமானத்தில பொருத்தப்பட்டுக் கொண்டிருந்ததாம்.

## தங்க நகை கண்டெடுக்கப்பட்டது

சுன்னாகம் மத்திய சந்தையில் கடந்த புதன்கிழமை அன்று தங்கநகை ஒன்று கண்டெடுக்கப்பட்டிருக்கிறது உரிமையாளர் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளுமாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதிப்பிரிவு அறிவித்துள்ளது.

## கட்டைக்காட்டில் அதிகாரியும் பலி

நேற்று முன்தினம் கட்டைக்காட்டில் நடைபெற்ற மோதலில் கொல்லப்பட்ட 20 படையினருள் ஒருவர் இராணுவ அதிகாரி என ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

## இன்றைய ஆட்டம்

உலகக்கோப்பை கிரிக்கெட் தொடரில் நியூசிலாந்து ஹமில்டனில் இன்று இந்தியாவும் சிம்பாவேயும் மோதுகின்றன.

இந்தியா மூன்று புள்ளிகளையும் சிம்பாவே இதுவரை எந்தப்புள்ளிகளையும் பெறவில்லை.

மற்றுமோர் ஆட்டத்தில் அவுஸ்திரேலியா ஸ்ரீலங்காவை எதிர்த்து ஆடவுள்ளது.

## கல்வி டிப்ளோமா பயிற்சி நெறி

1992 ஆம் ஆண்டிற்கான பட்டப் பின் படிப்பு கல்வியியல் டிப்ளோமா பயிற்சிநெறி தேசிய கல்வி நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ் கல்வித் திணைக்களத்தினால் முதன் முதலாக இன்று காலை 10-30 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரியில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இந்தப் பயிற்சி நெறியில் முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 450 பேர் இதில் கலந்து கொள்ளவுள்ளனர். (04)

கிளிநொச்சியில்...

டன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

நாளைய நிகழ்ச்சியாக விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திரராஜா கலந்து கொண்டு சிறப்புரையாற்ற உள்ளார்.

முதல் நாள் நடைபெற்ற மாநாட்டுத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட உள்ளன. 07

மூன்று—

கோயில வீதியிலும் விசேடமாக அமைக்கப்பட்டிருந்த மேடையில் வைக்கப்பட்டிருந்தன.

புலிகளால் மீட்கப்பட்டிருந்த ஆயுதங்களும் அருகில் மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.

சாவகச்சேரியிலும், சுதுமலை அம்மன் கோயில் வீதியிலும் வைக்கப்பட்டிருந்த மூன்று வீரவேங்கைகளுக்கு பெரும் தொகையான மக்கள் தங்கள் இறுதி அஞ்சலியைத் தெரிவித்தனர். 15, 07

## கட்டைக்காட்டில் மேலும் ஆயுதங்கள் மீட்பு

கட்டைக்காடு மோதலைத் தொடர்ந்து மேலும் அப்பகுதியிலிருந்து படையினரின் ஆயுதங்கள் சில நேற்று மீட்கப் பட்டன.

- ★ ஏ. கே. எல். எம். ஜி லிங் - 306
- ★ ஐ. எம் ரவைகள் - 604
- ★ ரி - 56 மகஸீன் - 5
- ★ ரி - 81 மகஸீன் - 2
- ★ சப்பாத்துகள் - 15
- ★ ஏ. கே. கோல்சர் - 2
- ★ தலைக்கவசத் தொப்பி - 7
- ★ கிறபாக் - 2
- ★ குப்பைவிறாண்டி - 1

## உரிய மருந்துகள் வழங்கப்படுவதில்லை

யாழ் பொது மருத்துவமனையில் நோயாளருக்கு வைத்தியர்களினால் எழுதிக்கொடுக்கும் மருந்துகள் சில நோயாளருக்கு வைத்தியர் குறிப்பிடும் அளவு வழங்கப்படுவதில்லையென பல நோயாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதனால் பல நோயாளர்கள் வெளியில் உள்ள தனியார் மருந்துச்சாலைகளில் பணத்துக்கு மருந்துகளை வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

நீரிழிவு நோயால் பீடிக்கப்பட்டவர்கள் போதிய மருந்துகள் வழங்கப்படாததால் அவர்கள் பெரும் சிரமத்திற்குள்ளாவதாகத் தெரிவிக்கப் படுகிறது. (06)

## ஒன்பது மாகாணங்களிலும் பிரதி தபால்மா அதிபர்கள்

ஒன்பது மாகாணங்களுக்கும் பிரதி தபால்மா அதிபர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

இனிமேல் ஒவ்வொருமாகாணங்களிலும் உள்ள தபால் நிலையங்கள் உப தபாலகங்கள் ஏஜன்ஸி தபாலகங்கள் என்பன இந்த பிரதி தபால்மா அதிபரின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும்.

கொழும்பில் உள்ள தபால்மா அதிபரின் நிர்வாகத்தில் இயங்கி வந்த தபால் திணைக்கள நிர்வாகம் இதன்படி மாகாண பிரதி தபால் அதிபரின் கீழ் இயங்க வைக்கப்படவுள்ளன.

தபால் ஊழியர்களின் பதவி உயர்வு, நியமனம் மற்றும் நடவடிக்கைகளும் இனிமேல் பிரதி தபால்மா அதிபரின் கீழ் மேற்கொள்ளப்படும்.

## இஸ்லாமிய மீட்பு முன்னணி தடைசெய்யப்பட்டது

அல்ஜீரியாவில் இயங்கிவரும் இஸ்லாமிய மீட்பு முன்னணிக் கட்சி கலைக்கப்பட வேண்டும் என்று அந்நாட்டு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அரசியல் சட்டத்தை மீறுவதாகவும் அதனை அவமதிக்கிறதாகவும், பொது அமைதியைச்சீர் குலைக்கிறது என்றும் அல்ஜீரிய உள்துறை அமைச்சர் இக்கட்சியைத் தடை செய்யுமாறு உயர் நீதிமன்றத்தைக் கேட்டிருந்தார்.

அல்ஜீரிய அரசியலில் வளர்ந்து வரும் இம் முன்னணி பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று விடும் எனக் கருதிய ஆளுங் கட்சியினர் கடந்த ஜனவரியில் நடைபெறவிருந்த பொதுத் தேர்தலை ரத்துச் செய்துவிட்டனர்.

தற்போது இம் முன்னணியின் பல தலைவர்களும் ஆதரவாளர்களும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பர்மா - தாய்லாந்து எல்லையில் பதற்ற நிலை

கலகக்காரர்களிடம் சிக்கிய இராணுவ தளத்தை மீட்கும் நடவடிக்கையின் போது பர்மிய இராணுவத்தினரால் ஏவப்பட்ட பீரங்கிக் குண்டுகள் தாய்லாந்து எல்லையில் விழுந்ததால் பர்மா-தாய்லாந்து எல்லையில் பதற்றம் தோன்றியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தாய்லாந்து எல்லையில் தலைமையகத்தைக் கொண்டிருக்கும் கிளர்ச்சியாளர்களிடம் வீழ்ந்த இராணுவத் தளத்தை மீட்டெடுப்பதன் பொருட்டு நாளாந்தம் பல மணித்தியாலங்களாக பர்மா விமானங்கள் குண்டு வீசிவருவதாகவும் படை பலத்தைப் பெருப்பிப்பதற்காக கடந்த இரு தினங்களாக குண்டு வீச்சுக்கள் நிறுத்தப்பட்டிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## பொருட்காட்சி

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மகளிர் அபிவிருத்தி நிலையம் ஒழுங்கு செய்துள்ள மாபெரும் உள்ளூர் உற்பத்திப் பொருட்காட்சி இன்றும் நாளையும் காலை 9 மணிமுதல் மாலை 7 மணிவரை யாழ். இந்துக் கலலூரியில நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சியில மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் மகளிர் குழுக்களும் தமிழீழத்தில் தனியார் மற்றும் பல்வேறு உள்ளூர் உற்பத்தி நிறுவனங்களும் தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் பிரிவுகளும் உள்ளூர் உற்பத்திப் பொருள்களை காட்சிக்கு வைக்கவுள்ளன.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்)லிமிற்றெட் திருவனத்தினரால் யாழ்கல்வியங்காடு டச்சுவீதி 'லஷ்மிபில்டிங்'கில் உள்ள அச்சகத்தில் 07-03-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது